**த. நா.ச.பே. எண் : 023** **நாள் :04.08.2014**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 4.8.2014

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், சமூக பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதிலும், வேலைவாய்ப்புகளை தோற்றுவிப்பதிலும் முக்கியப் பங்காற்றி வரும் சத்துள்ள உணவான பாலின் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் தங்கு தடையின்றி நியாயமான விலையில் கிடைக்கவும் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பால் உற்பத்தித் தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஏழை விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்ந்து, அவர்தம் வாழ்வு வளம் பெறும் என்பதை கருத்தில் கொண்டு எனது தலைமையிலான அரசு இரண்டாம் வெண்மை புரட்சிக்கு வித்திட்டு பால் உற்பத்தியை பெருக்குவதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக, அதிக பால் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக விளங்குகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நாளொன்றுக்கு 20 லட்சம் லிட்டர் என்று இருந்த ஆவின் பால் கொள்முதல் தற்போது 2013–2014–ல் நாள் ஒன்றுக்கு 23.22 லட்சம் லிட்டர் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பால் பண்ணைகளின் கட்டமைப்பை அதிகரித்து பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் நலனுக்காகவும், கால்நடை தீவன பயன்பாட்டை ஊக்கப்படுத்தவும் கீழ்க்காணும் பணிகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு இணையத்தின் மூலம் 46 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

1) சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களின் இயந்திர தளவாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய பால் குளிரூட்டும் இயந்திரங்கள், பால் கொள்கலன்கள், பாட்டில்களில் நெய் நிரப்பும் தானியங்கி இயந்திரம், மின்ஆக்கி, பால் பதப்படுத்தும் இயந்திரங்கள், கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரங்கள், பால் சமன்படுத்தும் இயந்திரங்கள், பிளாஸ்டிக் டப்புகள் சுத்தம் செய்யும் இயந்திரங்கள், பால் பாக்கெட்டுகள் மீது, உரிய விவரங்களை அச்சிடும் வெப்பமாற்று முறை உபகரணங்கள், அதாவது Thermal transfer for overprinting equipment ஆகியவை 35 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன் மூலம் சுமார் 2 லட்சத்து 26 ஆயிரத்து 432 பால் உற்பத்தியாளர்களும், 5 லட்சத்து 13 ஆயிரத்து 138 பால் நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

2) தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் இடையே கால்நடை தீவனப் பயன்பாட்டை ஊக்கப்படுத்தும் வகையில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் தீவன தொழிற்சாலை 10 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கப்பட்டு, தீவன உற்பத்தி திறன் நாளொன்றுக்கு 150 டன் என்ற அளவிற்கு உயர்த்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 4 லட்சத்து 29 ஆயிரம் உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

மேற்கூறிய எனது தலைமையிலான அரசின் முனைப்பான திட்டங்கள், தமிழகத்தில் பால் உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகள் கூடுதலான பயன்களைப் பெற்று நன்மை பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**